**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 2 February 2016

# என்யுஎஸ்–இன் ‘கட்டாய வாழ்க்கைத் திறன்’ திட்டம்

‘ரூட்ஸ் அண்ட் விங்ஸ்’ என்ற பெயரில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு அறிமுகம் கண்ட ‘கட்டாய அடிப்படை வாழ்க்கைத் திறன் திட்டத்தின்’ முதல் ஆண்டு மாணவர்கள் 2,100 பேர் தங்கள் கல்வியைத் தொடங்கியுள்ளனர்.

விழிப்புணர்வு, நீடித்திருக்கும் தன்மை, புரிந்துணர்வு உள்ளிட்டவற்றை மாணவர்கள் கருத்தரங்குகள், இணையக் கலந்துரையாடல்கள் போன்றவற்றின் மூலம் பயின்று வருகின்றனர்.

பதற்றம் நிறைந்த, நிச்சயமற்றதாக மாறிவரும் உலகில் தாக்குப்பிடிக்க உதவக் கூடிய திறன்களை வளர்ப்பது இந்தத் திட்டத்தின் நோக்கம். வரும் ஆகஸ்ட் மாதம் மேலும் 3,000 மாணவர்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். நேற்று அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய பல்கலைக்கழகத்தின் வேலை வாய்ப்புச் சந்தையில் உரையாற்றிய துணைத் தலைவரும் பேராசிரியருமான டான் எங் சியா, “உலகைப் பற்றி அறியும் ஆர்வத்தைத் தோற்றுவித்து விழிப்புணர்வு, பின்னோக்கி யோசித்தல், சுய திறன் மேம்பாடு போன்றவற்றின் மூலம் வாழ்க்கை குறித்து மாணவர்கள் கற்றுக்கொள்வது திட்டத்தின் முக்கிய நோக்கம்,” என்றார். ‘ஸ்டெம்’ எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதத் துறையில் இருக்கும் வேலை வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதும் தேசிய பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கம் என்றார் அவர். அந்த வேலை வாய்ப்புச் சந்தையில் 250 முதலாளிகள் பங்கேற்றனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.